ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

2004 ஜூலை 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–15

7. மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், 1991-1992, 1992-1993, 1993-1994, 1994-1995, 1995-1996 மற்றும் 1996-1997, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991–1992, 1992–1993, 1993–1994, 1994–1995, 1995–96 மற்றும் 1996–1997 ஆகிய ஆண்டுகளுக்கான மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1991–1992 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–1992 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல், சில இனங்களில், மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1991–1992 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1991–1992 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று